**பாய்ச்சல்**

முன்னுரை :-

புதின எழுத்துகளால் தனது புகழைத் தமிழ் உலகில் முத்திரை பதித்து சாகித்ய அகாதெமி விருதுபெற்ற சா.கந்தசாமியின் "பாய்ச்சல்" கதை நுட்பமான உணர்வுகளின் உறைவிடமாக விளங்குகின்றது. கலை ஈடுபாட்டின் முழுமையையும் இக்கதையில் அழகுறக் கூறியுள்ளார்.

தெருமுனைக்காட்சிகள் :

தெருக்களில் அன்றாடம் எத்தனையோ கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டே தான் இருக்கின்றன. சாதாரண எளிய மக்களின் பொழுதுபோக்கு, தெருக்களில் நடக்கின்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்பதேயாகும். அனுமார்போல வேடமிட்டு வந்த ஒருவன் அனைவரையும் மகிழ்விக்கும் விதமாக குரங்குபோல ஓடிவந்தான். இரண்டு கால்களையும் மாறிமாறி தலையில் அடித்துக் கொண்டு வேகமாக கைகளை வீசி நடந்தான். சிறிது தூரம் சென்றவுடன் அருகில் உள்ள கடையில் வாழைப்பழங்களைப் பறித்து அருகில் இருந்தவர்களுக்கெல்லாம் கொடுத்துத் தாமும் ஒரு பழம் சாப்பிட்டான்.

சதங்கை மேள தாளம் ;

சதங்கையும் மேளமும் தாளமும் நாதசுரமும் ஒன்றாக இசைந்தன. அனுமார் ஒலிக்கு ஏற்ப குறுக்கும் நெடுக்குமாகத் தாவிக் குதித்து பாய்ந்து சென்றார். நீண்ட வால் மேலே சுழன்று தரையில் அழுத்திப் புழுதியைக் கிளப்பினான்.

அனுமாரின் ஆட்டம் :

இசைக்கு ஏற்ப ஆடியவன் தன்னையும் மறந்து கைகளை மார்போடு அணைத்துக் கொண்டான். கீச்சீச் என்று கத்திக் கொண்டே பந்தக்காலை பிடித்துக் கொண்டு மேலே ஏறினான். திடீரென மேளதாளம் முழங்க கண்மூடி கண் திறப்பதற்குள் அனுமார் கீழே குதித்தார், வாலில் பெரிய தீப்பந்தம் கண்டு கூட்டம் பின்வாங்கியது. அனுமார் கால்களைத் தரையில் அடித்து உடம்பினைக் குலுக்கினார். நெருப்பு அலை பாய்ந்தது.

கைகளைத் தட்டிக் குட்டிக்கரணம் போட்டான். கூட்டமானது பயந்து ஓடியது. அனுமார் தன் கம்பீரமான தோற்றத்தோடு நின்று சிரித்தார், பின்பு கூட்டம் அமைதியானது.

அழகும் அனுமார் வேடமும் :

அழகு அனுமார் அருகில் சென்றான் வாலைப் பிடித்துப் பார்த்தான். அனுமாரோடு இவனால் நடக்க முடியவில்லை. அனுமார் திரும்பவும் ஆட ஆரம்பித்தார். பயந்தும் பதுங்கியும் ஆடினார். ஆட ஆட புழுதிப்புகைபோல எழுந்தது. ஆட்டம் முடிந்ததும் ஆற்றங்கரையொட்டி சின்னக் கோவில் பக்கம் அனுமார் தன் வேடத்தைக் களைத்தார். இதைப் பார்த்துக் கொண்டே இருந்த அழகு அனுமாரைப் பார்த்து "எனக்குக் கூட உங்களைப் போல ஆட வேண்டும் என்கிற ஆசை" என்றான். அதற்கு அனுமார் வேடம் போட்டவர் எங்கே ஒரு ஆட்டம் ஆடிக்காட்டு உனக்கு ஆட்டம் வருமான்னு பார்க்கிறேன், "சலங்கையைக் கட்டிக்கிட்டே ஆடு" என்றார்.

முடிவுரை :

இக்கதையில் சா.கந்தசாமி அவர்கள் கலைஞர்களின் வாழ்க்கையை அழகுறக் கூறியுள்ளார். கலைஞர்களின் விருப்பம் மற்றவர்களையும் கலைஞனாக ஆக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல் மகிழ்ச்சியாக இருக்கவும் வைக்கிறார்கள். இதே போல் தான், இக்கதையில் வரும் கலைஞன் அழகுவையும் ஆடவைத்து மகிழ்வாக இருக்கவும் செய்கின்றான். ஆம்! ஒரு கலைஞன் இன்னொரு கலைஞனை உருவாக்கும் உன்னத நிகழ்வு இக்கதையில் உணர்த்தப்பட்டுள்ளது.